செய்தி வெளியீடு எண். 193 நாள்: 07.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது உள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகள் 01.04.2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டை 01.04.2017 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. புதிய மின்னணு அட்டை அச்சிடப்பட்ட விவரம் குடும்ப அட்டைதாரர்களின் செல்லிடப்பேசிக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பி வைக்கப்படும். குறுஞ்செய்தி வரப்பெற்றதும் அதை அழித்து விடாமல், குறுஞ்செய்தி வரப்பெற்ற 7 நாட்களுக்குள், பழைய குடும்ப அட்டை, செல்லிடப்பேசி குறுஞ்செய்தியுடன் உடனடியாக நியாய விலைக்கடையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஸ்மார்ட் கார்டு குறுஞ்செய்தி வராதவர்கள் அச்சம் அடைய தேவையில்லை. அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஸ்மார்ச் கார்டு வழங்கப்படும். குடும்ப அட்டையுடன் ஆதார் எண் பதிவு, கைபேசி எண் பதிவு செய்யாதவர்கள் புதிதாக பதிவு செய்து ஸ்மார்ட் கார்டு பெறலாம். ஸ்மார்ட் கார்டு வரப்பெறாதவர்கள் ஸ்மார்ட் கார்டு வரும் வரை ஏற்கனவே உள்ள குடும்ப அட்டையில் தொடர்ந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம். தற்போது வழங்கப்பட்டு வரும் ஸ்மார்ட் கார்டில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி, குடும்பத்தின் வயதில் மூத்த பெண்மணி குடும்பத் தலைவராக குறிப்பிடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இது பெண்களை பெருமைப்படுத்தி மதிப்பளிக்கும் செயலாகும்.

குடும்ப அட்டை தொடர்பான கோரிக்கை மனுக்கள், ஏற்கனவே சாதி சான்று, இருப்பிடச் சான்று, பட்டாமாறுதல் உள்ளிட்ட வருவாய்த்துறையின் சான்றிதழ்கள் பெற இ-சேவை மையங்களில் விண்ணப்பம் அளிப்பதைப்போல, குடும்ப அட்டை தொடர்பான சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை போன்ற அனைத்தும் விண்ணப்பிக்கலாம், இதற்கு கட்டணம் வசூலிக்கப்படும். விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு இணைய வழியில் அனுப்பி வைக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் இணைய வழியிலேயே வழங்கல் துறையினர் ஒப்புதல் வழங்குவர். விண்ணப்பம் ஏற்கப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டது, குடும்ப உறுப்பினர் பெயர் சேர்க்கப்பட்ட நீக்கல் அல்லது நீக்கப்பட்ட, திருத்தப்பட்ட, புதிய ஸ்மார்ட் கார்டு தொடர்பான தகவல் விண்ணப்பதாரரின் செல்லிடப்பேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~